07.10.2025

அ.வ.எண். 4/2018

வா.சா.1 - கோவிந்தராஜ்,   த/பெ. ரங்கசாமி

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 07.10.2025 is accordance with the provision of Act X of 3331

1 முதல் 3 மற்றும் 5 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. வா.சா.ஆ.2 பொது அதிகார ஆவணத்தில் உள்ள பத்திர எண் என்ன என்றால் பத்திர எண் நினைவில்லை, 1985 பாகப்பிரிவினை பத்திரப்படி B-அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டது. வா.சா.ஆ-1, 1985 ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. வா.சா.ஆ.1 ன் பத்திர எண் தெரியுமா என்றால் தற்போது நினைவில்லை. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினையில் எத்தனை பாகங்களாக பிரிக்கப்பட்டது என்றால் A மற்றும் B-அட்டணை என இரண்டு பாகங்களாக பிரிக்கப்பட்டது. A-அட்டவணை சொத்தானது நஞ்சப்பன், சென்னியப்பன், சக்திவேல், கனகாத்தாள் ஆகியோருக்கு பிரிக்கப்பட்டது, B-அட்டவணை சொத்து ராமசாமிக்கு ஒதுக்கப்பட்டது.

2. A மற்றும் B-அட்டணை தவிர வேறு ஒரு பாகம் பிரிக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை. மேற்படி ஆவணத்தில் 1 இலக்கமிட்டவருக்கு C-அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் பொய். வா.சா.ஆ.1, பாகப்பிரிவினை ஆவணத்தில், "1 இலக்கமிட்டவருக்கு சூலூர் சார் பதிவாளர் அலுவலக 1979 ம் வருடத்திய 1480 என்ற எண்ணாக பதிவான பாகசாசனத்தில் C-அட்டவணையாக பிரிக்கப்பட்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது" என்றால் 1979 ஆவணத்திற்கும், எங்களுக்கும் சம்மந்தமில்லை. 1979 ம் வருட ஆவணப்படி, ராமசாமிக்கு பிரிக்கப்பட்ட B-அட்டவணை சொத்தை தான் நான் கிரயம் பெற்றேன் என்றால் இல்லை.

3. எனது கிரய பத்திரத்தில் செக்குபந்திகள் சரியாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். எனது கிரய பத்திரத்தில் செக்குபந்தி 1979 ம் வருடத்திய பாகப்பிரிவினை ஆவணத்தில் இருந்து எடுக்கப்பட்டது என்றால் 1979 ம் வருட ஆவண செக்குபந்தி தெரியாது, எனக்கு 1985 ம் ஆண்டு பாகப்பிரிவினை ஆவணத்தின் செக்குபந்தி பற்றி தான் தெரியும். வா.சா.ஆ.3 கிரய பத்திரத்தில் கிரயம்

கொடுத்தவர்களில் யார் எனக்கு உறவினர்கள் என்றால் மூன்று நபர்களுமே உறவினர்கள்தான். அதில் ராமசாமி எனது அத்தையின் மகன், நடராஜன் எனது அண்ணன், சின்னசாமி எனது மச்சினன் உறவுமுறை ஆவார்கள். சின்னசாமி பவர் ஏஜென்ட் என்றால் சரிதான். சின்னசாமிக்கும், சண்முகத்திற்கும் இடையே என்ன உறவு என்றால் உறவு இல்லை.

4. ராமசாமிக்கும், சுப்பண்ண கவுண்டருக்கும் என்ன உறவு என்றால் உறவு இல்லை. நான் கிரய தொகை யாரிடம் கொடுத்தேன் என்றால் பொது அதிகார முகவர்களை ஒன்றாக வைத்து பணம் கொடுத்தேன். யார் கையில் பணம் கொடுத்தேன் என்றால் நினைவில்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில், 5 ம் பிரதிவாதியின் தந்தை நஞ்சப்பன் என சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில், பத்தி 3 ல், ஏ-அட்டவணை சொத்து நஞ்சப்பன், சென்னியப்பன், சக்தி, கனகாத்தாள் ஆகியோருக்கு கூட்டாக பாத்தியப்பட்டது, பி-அட்டவணை சொத்து நஞ்சப்பனின் மூத்த மனைவி ராமாத்தாள் அவரது மகன் ராமசாமிக்கு ஒதுக்கப்பட்டது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ராமாத்தாள், நஞ்சப்பன் இறந்த பின்னிட்டு வாரிசாக வருகிறார்.

5. பொது அதிகார ஆவணத்தில் மாதம் குறிப்பிடவில்லை என்றால் அசல் ஆவணத்தில் மாதம் உள்ளது, நகல் ஆவணத்தில் குறிப்பிடவில்லை. சுப்பண்ண கவுண்டரின் வாரிசுகள் 3 முதல் 6 பிரதிவாதிகள் என்றால் சரிதான். நான் கிரயம் பெற்ற சொத்தின் விவரங்கள் அனைத்தும் 1153/1985 பாகப்பிரிவினை பத்திரத்தில் பிதுர்ராஜ்ஜித வகையில் பாத்தியப்பட்ட சொத்துவிவரம், ஆவண எண்.1480/1979 ன் படி அனைத்து விவரங்களும் தெரிவிக்கப்பட்டிருந்தது என்றும், பவர் ஏஜெண்ட் என்ற முறையில் கிரயம் பெற்ற முறையிலும், உறவினர்கள் என்ற வகையில் சொத்தினுடைய விவரங்களை முழுமையாக ஆவணத்தில் தெரியப்படுத்தாமல் மறைத்து கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

6. சொத்தை நான் தான் கிரயம் பெற்றேனா என்றால் நானும், சுப்பண்ண கவுண்டரும், சண்முகம் ஆகியோர் கிரயம் பெற்றோம். நான் எனது

குறுக்கவிசாரணையில் நான் கிரயம் பெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் அது தவறு. மூவரும் சேர்ந்து தான் கிரயம் பெற்றோம். ஏ-அட்டவணை சொத்தை 1. நஞ்சப்பன், 2. சென்னியப்பன், 3. சக்திவேல், 4. கனகாத்தாள் ஆகியோர் பாகம் செய்து கொண்டதில் பி-அட்டவணை சொத்தாக ராமசாமிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் தவறு. நாங்கள் கோரியுள்ள வழக்கு பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**<u>6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur